20 காசு

# காஞ்சி

15-6-69 நிறுவனர்: அண்ணாதுரை

5-48



With the best compliments from:

**Picreer Civil Works**

KANGAYAM.

With the best compliments from:

**Guru Shree Shantivijai Jain Trust,**

MADRAS-7.

காஞ்சி

நிறுவனர்: அண்ணதுரை

மலர் 5 | 15—6—69 | இதழ் 48

# தீர்வு—விரைவாகத் தேவை!

வெள்ளக் கொடுமையால் ஏற்பட்ட விபரீதங்களை விட, தெலுங்கானா பிரிவினைக் கிளர்ச்சிக்காரர்களால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வெங்கொடுமை மிகக் கடுமையானதேயாகும்.

சட்டம் — ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டியது அரசின் பொறுப்பு மட்டுமல்ல, அந்தப் பகுதி மக்களுக்கும் அதில் பெரும்பங்கு உண்டு. தெலுங்கானா பிரிவினை வாதிகள் சட்டம் மதிக்கப்படவேண்டியதொன்று என்ற தெளிவு பெற்றிருப்பவர்களாக நம்ப முடியவில்லை. ஊரடங்குச் சட்ட உத்திரவுகளைக்கூட அவர்கள் மதிக்க மறுத்து கலவரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிளர்ச்சிக்காரர்களை அடக்கும் முயற்சியில் போலீசாரை எதிர்த்து கிளர்ச்சிக்காரர்கள் துப்பாக்கி முதலான ஆயுதங்களையும் பயன்படுத்தி இருப்பது, போராட்ட முறைகளில் இந்தியா சந்திக்கும் புதுமைகளாகும்.

நியாயத்தின்பாற்பட்ட அல்லது அல்லாத ஏதோவொரு குறிக்கோளின் அடிப்படையில் போராட்டங்கள் பிறப்பெடுப்பது இயல்பானதே யாகும். ஆனால் போராட்டங்களின் குறிக்கோளையே இகழ்கின்ற அளவுக்கு அதன் நடைமுறைகள் மாறுமானால், போராட்டத்தையே கண்டிக்கத்தான் வேண்டியிருக்கும்.

அப்படிப்பட்டதொரு கண்டனத்துக்கு ஆளாகக் கூடியதாக ஆகிவிட்டிருக்கிறது தெலுங்கானா பிரிவினைப் போராட்டம்.

ஆந்திர மாநிலத்திலிருந்து பிரிந்துபோய் தனி மாநிலமாக இயங்கவேண்டும் என்ற குறிக்கோளில் தெலுங்கானா பகுதியினர் போராடத் துவங்கி, அது வன்முறை வெறியாட்டங்களின் விளைநிலமாகவும், சட்டம்—ஒழுங்கு சீர்குலைவின் தலைமையிடமாகவும் ஆகிவிட்டிருக்கிறது.

இவ்வளவு வெறியாட்டங்களும் ஏகோபித்தவொரு குரலின் கீழாவது நடைபெறுகின்றனவா என்று கவனித்தால் அப்படியும் தெரியவில்லை. ஆந்திர மாநிலத்தை தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கவேண்டும் என்று கேட்டு எழுந்த குரலில் ஒலித்த ஒருமித்த உணர்ச்சியினை இப்போது காணமுடியவில்லை,

தெலுங்கானா பகுதியிலுள்ள சில மாவட்டங்களே தனி தெலுங்கானா மாநிலத்தோடு இணைந்திருக்க விரும்பவில்லையென்று தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இதே பிரச்னை தொடர்பாக முன்னர் பிரதமர் ஆந்திராவுக்கு வந்திருந்தபோது இக்கருத்தை நிஜாமிபாத், அடிலாபாத் கம்மம் ஆகிய மாவட்டங்கள் அவரிடம் விளக்கி இருக்கின்றன. கொள்ளை, தீயிடல் துப்பாக்கிச் சூடு முதலான போராட்டங்களுக்குப் பின்னரும் இப்போது ஆந்திரா வந்துபோன உள்துறை அமைச்சர் சவான் அவர்களிடம், பிரிவினையை விரும்பாத அல்லது தெலுங்கானாவில் இணைந்திருக்க விரும்பாத தம் கருத்தை மீண்டும் எடுத்துக் காட்டி வலியுறுத்தியிருக்கின்றன.

தெலுங்கானா பிரிக்கப்படுமானால், தங்கள்பகுதியை மகாராட்டிரத்துடன் இணைத்துவிட வேண்டுமென்று நிஜாமாபாத் மாவட்டப் பிரதிநிதிகள் அறிவித்திருப்பதைப் போலவே, தங்கள் பகுதியை விதர்ப்பத்துடன் சேர்த்துக்கொண்டு விடவேண்டும் என்று அடிலாபாத் மாவட்டப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். விதர்ப்பம் தற்போது தனிமாநிலமாக இல்லாவிட்டாலும், இப்போது அங்கும் தனி மாநிலக் கோரிக்கை மெள்ள மெள்ள தளிர் விட்டுக்கொண்டு வருகிறது. அடிலாபாத்தின் ஆதரவும் விதர்ப்பத்துக்குக் கிடைக்குமானால் விதர்ப்ப மாநிலக் கிளர்ச்சி மேலும் உயிரோட்டம் அடையக்கூடும். இதேபோல் கம்மம் மாவட்டத்துப் பிரதிநிதிகள் தற்போது போலவே ஆந்திர மாநிலத்துடனேயே இணைந்திருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.

இவையெல்லாம் தெலுங்கானா கோரிக்கை முழு வலிவுடையது என்பதை மறுக்கக்கூடிய காரணங்களாகும். தனி மாநிலக் கோரிக்கையை முன்னாள் மத்திய அமைச்சராக விருந்த திரு. சென்னா ரெட்டி அவர்கள் தீவிரமாக எழுப்பிக் கொண்டிருக்கிறார். போராட்டத் திட்டங்கள் அறிவிக்கப் பெறுகிறபோது கம்யூனிஸ்டுகள் என்று ஐயுறத் தக்கவர்களும், சமூக விரோதிகள் என்று கூறத்தக்கவர்களும் தங்கள் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிடுகிறார்கள் 'நக்சல்பாரி'கள்கூட இதிலே அக்கறை காட்டுவது கண்டு ஆச்சர்யப்படாமலிருக்க முடியவில்லை.

எனவேதான் பிரச்னை 'சிக்கல்' ஆகி, சிக்கல் 'கிளர்ச்சி'யாகி கிளர்ச்சி 'வன்முறை'யாகி வன்முறைகள் உயிர்ப்பலி கொள்கின்ற அளவுக்கு மாறிவிட்டிருக்கிறது,

பிரச்னையின் 'தலைமை புருஷர்' என்று வருணிக்கப்படும் திரு. சென்னாரெட்டி. தெலுங்கானா பிரிவினை நடைபெற்று முடியும் வரையில் இப்போதைய ஆந்திர அரசை டிஸ்மிஸ் செய்து வரவேண்டும் என்று குரல் எழுப்பி இருக்கிறார்,

பிரச்னையின் சூட்டைத் தணிக்க இந்த வழியினைக் கையாள்வது பற்றியும் டெல்லி பீடமும் கருத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதனை எதிர்பார்த்துத்தானோ என்னவோ முதல்வர் திரு. பிரும்மானந்த ரெட்டி அவசியமானால் தானே பதவி விலகிவிடுவதாகவும் அறிவித்திருக்கிறார்.

திரு. சென்னா ரெட்டியின் கோரிக்கையிலும் மத்திய அரசின் முடிவிலும் என்ன நியாயமிருக்கிறது என்பது தெளிவாகப்படவில்லை. பிரச்னைகளை ஒத்திப்போட, தற்காலிகமான ஒரு அமைதிச் சூழலை உண்டாக்க, இப்போதைய அமைச்சரவையினை டிஸ்மிஸ் செய்வது தேவைப்படக் கூடிய ஒரு 'உத்தி'யாக இருக்கக்கூடும். ஆனால் ஆந்திர அரசை டிஸ்மிஸ் செய்துவிட்டு தனி மாநிலம் அமைக்கக் கேட்பது இப்போதைய அரசின் பால் கொண்டுள்ள வெறுப்பினைப் பிரதிபலித்துக் காட்ட மட்டுமே பயன்படும். அப்படியானால் அரசினைக் கலைத்துவிடுவது ஒன்று மட்டுமே கிளர்ச்சிக்காரர்களுக்குப் போதுமானதாகும். தனி மாநிலக் கோரிக்கை

[14-ம் பக்கம் பார்க்க]

## தம்பி

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம், குற்றமே!

# நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்……….!

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், மான் மழுவேந்திய மகேசன், மாலும் அயனும் தேடித்தேடிப் பார்த்தும் அடியும் முடியும் கண்டறிய வொண்ணாதபடி அண்டசராசரமனைத்துமாய் நின்ற அரன், உமையொரு பாகன், சிறுபொறி கிளப்பிச் சிதறினாலே எதிர்ப்பட்டதனைத்தையும் சாம்பலாக்கிடத்தக்கதான 'சம்ஹார சக்தி' படைத்த நெற்றிக் கண்ணைக் காட்டினார் — ஏடும் எழுத்தாணியுமின்றி பிறிதோர்பலமற்ற நக்கீரன் எனும் பெரும் புலவர், ஐயனே! யார் நீவிர் என்பதனை அறிந்தேன், எனினும் அச்சம் காரணமாகவோ பக்திக்குக் கட்டுப்பட்டோ, என் நெஞ்சார உணர்ந்ததை எடுத்துரைப்பதை விட்டு விடுவேன் என்று மட்டும் எண்ணாதீர், நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! என்று எடுத்துரைத்தாராம்.

தமிழர் பங்கமுறாமல் சங்கம் வளர்த்து, சான்றோராய், ஒழுகி வந்த நாட்களில், தமிழ்ப்பெரும் புலவர்களின் மனவலிவு எத்துணை ஏற்றமுடையதாக இருந்தது என்பதனை எடுத்துக்காட்ட, நக்கீரன் நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று அஞ்சாது எடுத்துரைத்த கதையைக் கூறுவது, இப்போது, ஏறத்தாழ மேடை மரபு ஆகிவிட்டது.

தமிழன் எதற்கும் அஞ்சமாட்டான், மனதிற்குச் சரியெனப்பட்டதை, எவர் குறுக்கிட்டாலும், உருட்டி மிரட்டினாலும் எடுத்துரைக்கத் தயங்கமாட்டான், என்பதற்கான எடுத்துக்காட்டாக நக்கீரன் விளங்குவது போல், பிறமொழியாளர்களிடம் காதைகள் உள்ளனவா என்பதுகூட ஐயப்பாடுதான்.

தமிழரின் அஞ்சா நெஞ்சினையும், தயாபரனின் உருட்டல் மிரட்டல் வேலையையும் விளக்கிடப் பயன்படுத்தப்படும் இந்த நக்கீரம், பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணமா, செயற்கை மணமா என்ற பிரச்சினையை ஒட்டிப் பிறந்தது.

செற்கையில்தான் மணம்;என்பது நக்கீரன் வாதம்.

இல்லை, இயற்கைமணம் உண்டு;என்பது இமயவன் இயம்பிய வாதம்.

நக்கீரனுக்கு நெஞ்சில் நடுக்கம் இல்லை—புலமை வலிவளித்தது.



உள்ள படைகள் உருக்குலைந்து ஓடிடக் கண்டான பிறகு மூலபலப் படையின் துணையை நாடும் முறைப் படி, சிவனுர், புலமைக்கு உரிய வாதங்கள் பயன்படா மற்போன பிறகு. மூலபலம் காட்டும் நோக்குடன், ஏ! ஏடு தூக்கியே! எம்மை யார் என்று காண்பாயாக! என்று எடுத்துக்கூறி. மடக்கிடும் முறையில், நெற்றிக் கண்ணைக் காட்டினுர்.

கண்டேன், கண் மூன்றுடையோனே! கண்டேன்! எனினும் குற்றம் குற்றமே என்று துணிந்துரைத்தார், நக்கீரர் எனும் பெரும் புலவர்.

தமிழர் இதனை மேடைமரபு ஆக்கிக்கொள்ளும் அளவுக்கேனும் ஆர்வம் இழந்திடாமல் உள்ளனரே என்பதிலே மகிழ்ச்சி கொள்ளத்தான் வேண்டும்.

எனினும், என் மகிழ்ச்சி ஒன்றுக்குப் பத்தாகி என் உள்ளத்தில் களிப்புக் கொந்தளிக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும் ஓர் நிகழ்ச்சி, சின்னுட்களுக்கு முன்பு நடைபெற்றது—பெரும்புலவனும் நக்கீரன்பற்றி காமராஜர் பேசினுர்!

ஆமடா, தம்பி, ஆமாம்! நக்கீரன் பற்றி காமராஜர் பேசினுர்!!

தமிழன் இனி தலைநிமிர்ந்து நிற்கலாம், தோள் தட்டி ஆடலாம், பள்ளுப்பாடி மகிழலாம்; காமராஜர், மாநில முதலமைச்சர், சங்கம் புகழ் விளங்கிய சான்ருேராம் நக்கீரன் குறித்துப் பேசிடவும், அதனை நாட்டு மக்கள் கேட்டு இன்புறவுமானதோர் நற்காலம் பிறந்து விட்டதே என்றுகூட ஒருகணம் எண்ணினேன்—மறு கணமோ...!

நக்கீரர்போலக் குற்றம் குற்றமே என்று எடுத்துக் கூறும் பண்பு பாராட்டத்தக்கது, அது வளர வேண்டும் என்று பேசுகிருரா என்ருல், அதுதான் இல்லை!

உன் புருஷனேடுதான் நீ எப்போதும் சமரசமாடு வாயே, இன்று என்னேடு கொஞ்சம் சிரித்துப் பேசேன் என்று கேட்கும் பாவனையில் நக்கீரர் குறித்துச் சுட்டிக் காட்டிய காமராஜர், அவர்போல அஞ்சா நெஞ்சுடன், தவறு எத்துணை பெரிய இடத்தவர் செய்தாலும் கலங் காமல், அஞ்சாமல், குற்றம் குற்றமே என்று எடுத்துக் கூறுக என்று பேசாமல், நக்கீரர் பரம்பரை என்று கூறிக் கொள்கிறீர்களே, உங்களுக்கு ஏன் வடநாட்டினிடம் பயம் வடநாடு ஆதிக்கம் செலுத்தும் என்று ஏன் பயப் படுகிறீர்கள்? வடநாடுதான் ஆதிக்கம் செலுத்தட்டுமே என்று பேசுகிருர்.

இதிலே, அவர் காட்டும் தெளிவு இருக்கிறதே அதைக் கண்டு அகில உலகும் அதிசயிக்கும்!

முதுகின் மீது யார் ஏறி அழுத்திஞலும் வாய் திறவாமல் இருப்பது நக்கீரர் பரம்பரையின் போக்காக இருக்கவேண்டும் என்று கருத்துரை அளித் திட, காமராஜரால் தவிர வேறு ஒருவரால் முடியாது. நிச்சயமாக முடியாது.

சிவபெருமான் என்று தெரிந்த பிறகும், நக்கீரர் அஞ்சாமல் தமது எதிர்ப்பை, மறுப்பைத் தெரிவித்தார்.

அதே முறையிலேதான், சுட்டுச்சாம்பலாக்கவல்ல சக்தியைப் பெற்றவர் நேரு பெருமகனுர் என்று தெரிந் தும், அந்தச் செயலில் அவருடைய துரைத்தனம் இந்த எட்டாண்டுகளிலே, நிரம்பப் பயிற்சியும் பெற்று விட்டது என்பதை அறிந்தும், நெற்றிக் கண்ணைக் காட் டிஞலும் குற்றம் குற்றமே என்று எடுத்துரைக்கும் துணி வும், தமிழ் மரபு இதுதான் என்பதைக் காட்டிடும் போக்கும், முன்னேற்றக் கழகத்திடம் இருக்கிறது. இதைக் கண்டு பெறவேண்டிய கருத்தைப் பெருமல் அப்படிப்பட்ட நக்கீரர் வழி வந்தவர்கள் வடநாட்டுக் குப் பயப்படுவானேன் என்று வக்கணை பேசுவதற்குத் தேவையான சிறுமதியைப் பலர் பெற முயன்ருலும் முடி யாது, நமது மாநில முதலமைச்சருடன் இதில் போட்டி யிட எவராலும் இயலாது.

எனினும் எனக்கோர் மகிழ்ச்சி—கனியைப் பறித்து குறும்புக்காக மந்தி வீசிஞலும், கனி கிடைப்பது நல்ல தல்லவா! அதுபோல, தவருகப் பயன்படுத்துகிருர் என்ற போதிலும், காமராஜர், தமிழகம் தாழ்ந்திடாமல் இருந்த காலத்துச் 'செய்திகளை' மேலும் மேலும் தெரிந்துகொள்வது, நல்லது என்று எண்ணவேண்டி இருக்கிறது.

நக்கீரர், நெற்றிக் கண்ணைக் காட்டிஞலும் குற்றம் குற்றமே என்று கூறியதும், என்ன இவர் தம் அஞ் சாமை! என்று வியந்து வெண்மதி சூடியோன், அவரை வாழ்த்தினன் என்று கதை இல்லை. வெந்தழல் நக்கீரர் உடலைப் பற்றிக் கொண்டதன்னதோர் நிலையை மூட்டி விட்டார் என்றும், பின்னர் அப்பெரும் புலவர் திருமுருகாற்றுப்படை பாடி உய்வு பெற்ருர் என்றுதான் திருவிளையாடல் குறித்து உரைக்கின்றனர்.

எனவே, நக்கீரர் காலத்திலும் சரி, அஞ்சாநெஞ் சனைப் போற்றிட ஒரு சிலரே உளர் என்று கூறத் தக்க இக்காலத்திலும் சரி, நெற்றிக் கண்ணைக் காட்டி ஞலும் குற்றம் குற்றமே என்று கூறும் போக்கினை, மேலிடத்தில் அமர்ந்தவர்கள் பாராட்டுவது கிடை யாது—பகைதான் பெருநெருப்பாகும்.

நக்கீரர் கதியே இதுவாயிற்று — உண்மையைச் சொன்னதற்காக உழல நேரிட்டது. அதுவும் உமா நாதனின் உக்கிரத்திஞல் என்று கண்ட பிற்காலத் தமிழர்கள், ஒற்றைக் கண்ணனுக இருந்தாலும்கூட அவன் ஊராளும் நிலைபெற்ருன் என்ருல், அடங்கவும், ஒடுங்கவும், ஆமையாகவும் ஊமையாகவும் தாழ்ந்து போயினர். எனவே எதைச் சொன்ஞலும் சரி என்று ஏற்றுக்கொள்ளும் பாவனைப் பணிவும், கோழை உள்ள மும் ஏற்பட்டு விட்டது; அதன் விளைவாகவே இங்கு ஆரியம் நுழையவும், பிறகு ஆங்கிலேயர் அரசாளவும் இன்று வடவர் கொட்டமடிக்கவுமான கோணல் நிலை ஏற்பட்டது; இதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறிடும் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்; காமராஜரோ, நாவடங்கிக் கிடவுங்கள் என்று புத்தி கூற நக்கீரர் கதையையே பயன்படுத்தப் பார்க்கிருர்.

போகட்டும் இதற்காகவேனும் இவர் நக்கீரர், கபிலர் இளங்கோவடிகளார்பற்றி அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் உள்ளபடி மகிழ் கிறேன்.

'முதியோர் கல்வி'யில் பலவகை உண்டு; அதில் இது ஒருவகை என்றெண்ணி மகிழ்கிறேன்.

பெறவேண்டிய 'பாடம்' துவக்கத்தில் கிடைக் காமறபோயினும், தமிழகம் கொண்டிருந்த புலமையும், கோலோச்சிய தன்மையும் பெற்றிருந்த வளமும், பின் னர் அதனை இழந்ததன் காரணமும் அறிந்திடவும், அறிந்ததன் பலனுகவே, மீண்டும் தாழ்ந்த தமிழகம் எழுச்சி பெறுவதற்கான திட்டம் காணவேண்டும் என்று எண்ணவும உள்ளத்தில் ஆவல் அரும்பும்! இது என் நம்பிக்கை.

## 22—6—69 காஞ்சி இதழில் அறிஞர் அண்ணா அவர்களின் வீரத் தியாகி என்ற தம்பிக்கு மடல் இடம் பெறுகிறது.



நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! —என்று கூறிடும் அளவுக்கு நெஞ்சு உரம் தமிழகத்தில் இருந்துவந்தது; காமராஜர் அறிந்து உரைக்கும் அளவுக்கு, அந்தக்காதை நாட்டிலே சர்வ சாதாரணமாகிவிட்டுமிருக்கிறது— எனினும், அத்தகைய தமிழகத்தில், காணக் கிடைக்கும் எல்லா வகையான ஆதாரங்களையும் கொண்டு பார்க்கும்போது, தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழகத்துக்குத்தான் உரிமையான உடைமைகள் என்பது தெரிந்திருந்தும், அதனை தேசியப் பாசம் குன்றா முறையிலும், தெளிவு தெரியும் வகையிலும் எடுத்துக் காட்டியும், டில்லி ஏற்க மறுத்ததே அதுபோது, நக்கீரம் பேசும் இந் நற்றலைவர் செய்தது என்ன? தமிழரின் உரிமையை மறுப்பவர், எவராயினும், எத்துணை ஏற்றம் பெற்றோராக இருப்பினும், கொற்றம் கொண்டு அதனையே கொடுமைக்குக் கருவியாக்கிக் கொண்டோராக இருப்பினும், நான் பணிந்திடுவேன் அல்லேன், பணிந்திடுதல் பண்புமல்ல, தமிழ் மரபுமாகாது, என்று சீறிக் கிளம்பினார்!

தேவிகுளம் போனாலென்ன
வாவி குளம் வந்தாலென்ன
வாஞ்சனை போதுமய்யா, நேருவே!
வாய்திறவேனே, மெய்யாய்!

என்று கண்ணி பாடிக் கிடந்திட்டாரே! இப்படிப்பட்டவர்களிடம் தமிழகம் சிக்கிய பிறகுதான், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறிடும் உள்ள உரம் உருக்குலைந்தது, எடுப்பார் கைப்பிள்ளைகளும், எனக்கென்ன பங்கு என்று கேட்பவர்களும் கொலுவீற்றிருக்கத் தொடங்கினர், கோல் சாய்ந்தது, கோலம் கலைந்தது. ஞாலம் புகழ் வாழ்ந்த தமிழர், நாமம் மட்டும் தமிழரெனப் பெற்று வாழ்ந்திடும் அவலம் பிறந்தது, அவதி மிகுந்தது.

எனவேதான் இது காலை தமிழரின் பண்டைய பெருமையினை எடுத்துக்காட்டியேனும் ஓர் புது எழுச்சி காணலாமா என்று தம்பி, நாமெல்லாம் எண்ணுகிறோம்.

தமிழ் இனம், பண்பு கெடாத நாட்களில் பாராண்ட பாங்குபற்றி படிக்குந்தோறும் படிக்குந்தோறும் பாகனைச் சுவை அளித்திடும் பாக்களைக் காண்கிறோம், பெருமூச்செறிகிறோம்.

கோடும் குவடும் பொரு தரங்கக்
குமரித் துறையில் படு முத்தும்
கொற்கைத் துறையில் துறை வாணர்
குவிக்கும் சலாபக் குவால் முத்தும்
ஆடும் பெருந்தண் துறைப் பொருனை
ஆற்றில் படுதெண்ணிலா முத்தும்
அந்தண் பொதியத்தடஞ்சாரல்
அருவி சொரியும் குளர் முத்தும்!

என்று பாடுகிறார்கள்—உன் தமிழகம் முத்தும் மணியும் ஒளிதர விளங்கிய உயிரோவியம் என்பதனை அறிந்திடுக! என்று புலவர் பெருமக்கள், பொருளுரையும் பொழிப்புரையும் கேட்டும் பதைத்திடாதார் பரிபாலனத்திலே உள்ளோமே! முத்து கூத்தாடுமாமே முந்தையர் நாட்களில், வறுமை முடைநாற்றமன்றோ துளைக்கிறது என்று எண்ணுகிறோம், ஏங்கித் தவிக்கிறோம்.

"குன்றின் இளவாடை வரும் பொழுதெல்லாம்
மலர்ந்த திருக்கொன்றை நாறத்
தென்றல் வரும் பொழுதெல்லாம் செழுஞ் சாந்தின்
மண்நாறும் செல்வ வீதி...—"

என்று கூறுகிறார் புலவர்—தமிழகத்தின் புகழ் மணம், கமழ்ந்திருந்த அந்த நாட்கள் நினைவிற்கு வருகின்றன. அந்தச் 'செல்வவீதி'களிலே இன்று தேம்பித் தவித்தும், திண்டாடித் திகைத்தும் உழைத்து உருக்குலைந்தும், பிழைப்பிற்கு வழி காணாது புலம்பியும், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் கிடைக்காததால், இழிநிலை பெற்றும், தமிழர் உழல்கின்றனரே!

குன்றிலிருந்து கிளம்பும் காற்றும், ஊருக்குள் செல்கிறோம், மக்களுடன் உறவாடி மகிழச் செல்கிறோம், செல்லுங்காலை, எமைக் காண வந்த இளங்காற்றே! எமக்களிக்க எது கொணர்ந்தனை? என்று கேட்டிடின் என்ன செய்வது என்று எண்ணிப்போலும் மலர்ந்த கொன்றையின் மணத்தை வாரிக்கொண்டு வந்து தருகிறது; இளவாடை! தென்றல் வீசும்போது, இனியதோர் குளிர்ச்சி மட்டுமா! அந்தத் தென்றல் தமிழகத்

தில் வீசுகிறதல்லவா, தமிழர், தென்றலுக்கே வாசம் அளிக்கின்றனர் — செழுஞ்சாந்தின் மணம் பெறுகிறது தென்றல்! இவ்விதமெல்லாம் இருந்த 'செல்வ வீதி,' களிலே இன்று காண்பது என்ன? இன்றைய நிலையை எண்ணி எண்ணி ஏக்கமுறும்போது, எதிரே வந்து நின்று காமராஜர், "ஓலமிட்டுக் கிடப்பானேன்—நீதான் நக்கீரன் பரம்பரையாயிற்றே!" என்று கேலி பேசுகிறார். தமிழகம் எத்துணை தாழ்நிலையில் இருக்கிறது என்பதற்கு நான் ஓர் நடமாடும் சான்று என்று கூறிக்கொள்கிறார்!!

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நெஞ்சுறுதி கொண்டோராகத் தமிழர் இருந்த நாட்களில், சிங்களம், புட்பகம், யவனம், சீனம், சோனகம், வங்கம், மகதம், கலிங்கம், காந்தாரம், காமரூபம்—எனும் எண்ணற்ற நாடுகள் பலவும் தமிழகத்தின் திருவைக்கண்டு வியந்தன, திறனைக் கண்டு அஞ்சின, செருமுனைக்கு வரபயந்தன. தோழமைக்குக் காத்துக் கிடந்தன! இமயம் தொட்டு நின்ற அரசுகள் அனைத்தும் தமிழர் முரசு கொட்டுகின்றனர் என்று அறிந்தால், தமது அரசுகட்டில் ஆடிட அச்சம் கொண்டனர்.

கலிங்கத்துப் பரணி இதனை காட்டி நிற்கிறது.

கனக—விசயர் காதை இதனை அறிவிக்கிறது.

கடாரம் கொண்டான், கங்கை கொண்டான், இமய வரம்பன்—என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் உள்ளன —ஒவ்வொன்றும் ஒவ்வோர் வீரக் காதையை விளக்குவன!

அவ்விதம் புகழ் பரப்பி வாழ்ந்த தமிழன் இன்று அடி பணிந்தும், அடிமையாகியும், உரிமை இழந்தும் உதவாக்கரை நிலை பெற்றும், இழிந்து கிடக்கிறானே, இந்த நிலை மாற வழி என்ன என்கிறோம்—காமராஜர், நீதான் நக்கீரன் பரம்பரையாச்சே! உனக்கென்ன குறை!—என்று நையாண்டி பேசுகிறார்.

நையாண்டி பேசட்டும், தம்பி, தாராளமாகப் பேசட்டும், பேசுவதற்காகவேனும், தமிழரின் வரலாற்றுத் துணுக்குகளைக் கேட்டுப் பெறட்டும்—அவை உள்ளத்திலே வந்து புகப் புக, நையாண்டி பேசும் போக்கே கூட மாறிவிடக்கூடும்,

"அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்?
இந்த மாநிலம் முழுதாண்டிருந்தார்
இணையின்றி வாழ்ந்தார் தமிழ் நாட்டு வேந்தர்"

என்று பண்பாடத் தோன்றும், தமிழகத்தின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை உடைத்திடாமல், இந்தத் தடந்தோள்கள் எதற்கு என்று கேட்டிடும் ஆற்றல் எழும், தமிழ் அரசு அமையும்!

அந்த நன்னாளைப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடனேயே, நக்கீரர் காதை காட்டி நையாண்டி செய்யும் காமராஜரை நாம் சகித்துக் கொள்கிறோம்.

அண்ணன்,

அண்ணாதுரை

With the best compliments from:

**Shantidev Genearl Supply Syndicate,**

**MADRAS-7.**

# சமுதாயச் சிந்தனைகள் (2)

அன்புள்ள நண்பா!

மனிதன் முழுமை பெற்றவனாக வாழ முடியாததொரு அமைப்பாக இருந்துகொண்டிருக்கும் சமூகக் கட்டு திட்டங்கள்பற்றி எண்ணிப் பார்க்கிறபோது நம்மை பின்னோக்கி இழுத்துச் செல்கிறது என்றேனல்லவா?

பின்னோக்கி என்றால் எந்த அளவுக்குச் செல்ல வேண்டும்? காட்டுமிராண்டிக் காலத்துக்குப் போக வேண்டுமா? திட்டுத்திட்டாக இருந்த எதிரே கண்ணுக்குத் தெரிந்தமட்டும் எந்த அளவுக்குத் தனக்கு இருக்கிறது என்பதை தெரியப்படுத்தும் அளவு மட்டும் —நிலத்தைக் கூறு போட்டுக்கொண்டு 'தனது'' என்று சொந்தம் கொண்டாடத் தொடங்கிய காலம் வரையிலா? அண்ணன், தம்பி, அத்தான், மாமன், மாமி, அக்காள்தங்கை என்ற பாகுபாடு ஏற்படுத்திக்கொண்டு ஒழுக்க விதிகள் சிலவற்றையும் வரையறைப் படுத்திக் கொண்ட நாள் மட்டுமா?

அவையெல்லாம் தேவையில்லை. இன்றைய மனித சமுதாயம் அனைத்துமாகக்கூடி விரும்பினாலும் அந்த நாட்கள் இனி மீண்டு வரப்போவதில்லை. இறந்த காலத்தை, நிகழ்காலமாக்கவோ, எதிர்காலமாக்கவோ யாராலும் இயலாது.

ஆனால் நண்பா, வால்டேரும், லெனினும், சாக்ரடீசும், ஜன்டினும், புத்தரும், காந்தியும், ஏசுவும், நபிகள் நாயகமும் இன்றளவும்கூட நினைவுகூறப்படுகிறார்களே! அதுமட்டும் எப்படி முடிகிறது! நாளைக்கு நிலாவுலகை எட்டிப்பார்த்துவிட்டுத் திரும்பியவர்கள் மட்டுமல்லாது நிலாத்தடத்தில் 'குடும்பம்' நடத்தி விட்டுத் திரும்பி இருக்கிறவர்கள்கூட கால காலத்துக்கும் நினைவில் நிறுத்தப்படுவர்கள். ஏன்?

இவைகள் எல்லாம் இந்த மனித சமுதாயத்துக்கென்று ஏதோ சிலவற்றைக் கூறியும் செய்தும் வந்த காரணங்களால்தானே காலம் அவர்களை நினைவுகூர்கிறது. அதுபோல்தான் இறந்த காலத்தை இன்றைக்கு ஆக்கித்தர முடியாமற்போகுமானாலும் ஆற்றல் மிக்கவர்களை—அறிஞர் பெருமக்களை நினைவுகொள்ளுதல் ஒப்ப, இறந்த காலத்தின் சிலபல நல்ல நிகழ்ச்சிகளை, சம்பவக் கலவைகளை மட்டும் நிகழ் காலத்துக்கோ, எதிர்காலத்துக்கோவென்று எடுத்துக்கொள்ள முடியும்.

போதிமரம் என்று வருணிக்கப்படும் ஆலமரத்தடியிலே ஞானம் பெற்றதாகக் கூறப்படும் புத்தர், இந்த மனித சமுதாயத்துக்கென்று ஏதோ சிலவற்றை அருளிப்போயிருக்கிறார்.

காந்தியடிகள் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அகிம்சை. அகிம்சை என்று எடுத்துக் காட்டிவந்தாரே ஏன்? தனது சுதந்திரப் போராட்டக் கொள்கையே அந்த அடிப்படையிலேதான் இருக்கவேண்டும் என்று பன்னிப் பன்னிக் கூறிவந்தாரே அது ஏன்?

கி. மு. வில் இருந்தவர் அன்றோ புத்தர்! ஏறத்தாழ இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே பிறந்து வளர்ந்த புத்தரது அகிம்சை போதனைகளை காந்தியடிகள் கூறி அதனையே அரசியல் அறமாக்கிக் காட்டியது எதனாலே?

புத்தர் காலத்திலே இருந்த மறக் கொள்கைகள் காந்தியடிகள் காலத்திலும் மங்காது மறையாதுதான் இருந்திருக்கிறது என்பதுதான்பொருளா? அன்றி காலச் சுழற்சி, இறந்த காலத்துச் சம்பவங்கள் சிலவற்றை மட்டும் நிகழ்காலத்துச் சென்று நிரந்தரமாகத் தந்து விட்டுப் போய்விட்டதா?

எல்லாவற்றுக்கும் 'சமூகக் கட்டுக்கள்''தான் முழுமுதற்காரணம் என்று சட்டென்று கூறிவிடத் தோன்றும். மேலெழுந்தவாரியான ''கண்ணோட்டம்'' அப்படித்தான் இருக்கவும் முடியும்!

வரையறுக்கப்பட்ட ஒரு சில வரம்புக்குள் வளைய வளைய வந்துகொண்டிருக்க வேண்டிய நிலைமை மாறாமல் மறையாமலிருந்து கொண்டிருப்பதுதான் உண்மைக் காரணமாக விருக்க முடியும்.

இதுபோன்ற சமுதாயக் கட்டு திட்டங்களாலேயே மனிதனை செழுமையாக வாழச் செய்யக்கூடிய ஆற்றலினைப் பெற முடியவில்லை என்று இப்போது நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

நம்மால் மட்டுமல்ல, சமூகத்தைப் பற்றிய சிந்தனைகளை இதுவரையில் யார் யார் சிந்தித்து வந்திருக்கிறார்களோ அவர்கள் அத்தனைப் பேருமே புரிந்து கூறியவைதான் அவை அதனாலேயே புத்தர் கூறிய சில பேருண்மைகளை காந்தியடிகளும் எடுத்துக் காட்டவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலக்காகி இருக்கிறார்.

இந்தக் கிழமை நண்பா, வால்டேர், லெனின், சாக்ரடீஸ், புத்தர், காந்தி, ஏசு, குருநானக்—குன்ஸ்ரு போன்றோர் சிந்தனை செலுத்திய சமூக சிந்தனைகளைப் போலவே நமது காமராசரும்கூட சிந்தனை செலுத்தி இருக்கிறார் என்றறிய நீ ஆச்சரியப்படக்கூடும்,

காமராசர் முழுக்கவும் நனைந்த ஒரு அரசியல்வாதியாயிற்றே—அவராவது சமுதாயச் சிந்தனைகளைப் பற்றிப் பேசுவதாவது என்று குழம்பத் தேவையில்லை. சத்தியமாகச் சொல்கிறேன். அரசியல் வாதியான காமராசர் சமூக அநீதிகள் என்று சிலவற்றைச் சொல்லி பரிகாரமும் அறிவித்து விட்டிருக்கிறார் நண்பா!

"மனிதனை மனிதன் வஞ்சித்து வாழக் கூடிய அளவுக்குத் தன்னை வளர்த்துக் கொண்டு விட்டிருக்கிறான். இதற்காக மனிதனைக் குறைகூறக் கூடாது; அவன் சார்ந்திருக்கும் சமூகம் அப்படிப்பட்டதா யிருக்கிறது.

சமூகத்தின் அமைப்பு மாற்றி யமைக்கப் பட வேண்டும்; இந்தப் போராட்டத்துக்கு இளைஞர்கள் முன்வர வேண்டும். கட்சி நலம் கருதாது இளைஞர்கள் இதிலே பங்குகொள்ள வேண்டும். இளைஞர்களாலேயே இது முடியக் கூடியதாகும்."

என்ற பொருள் படும்படியாக சென்னையில் நமது அருமை மேயர் வேலூர் நாராயணன் அவர்களது முன்னிலையில் கூடிப் பேசியிருக்கிறார்.

காமராசர் என்றால் எப்போதுமே நம்முடைய கேலிக்கும் கிண்டலுக்கும் உரியவர்தானே என்று உன்னையே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம்.

சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பார்கள் இல்லையா? அது எந்த அளவுக்கு உண்மை என்பதை என்னாலேயேகூட இப்போதுதான் நண்பா புரிந்து கொள்ள முடிகிறது.

காமராசரால்கூட சமுதாயச் சிந்தனைப் பற்றிப் பேச முடியும் என்பதால் அல்ல—சமுதாயச் சிந்தனைகள் பற்றி காமராசர் பேசி இருப்பதுகூட எடுத்துக் காட்டப் பயன்படுகிறதே என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

இதிலிருந்து இன்னொன்றையும் புரிந்துகொள்ள முடிகிறது. சென்ற கிழமை அரசியலும், பொருளாதாரமும் சமூகத்தை சுழற்கோடுபோல வளைத்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தேன். அனுமானத்தின் அடிப்படையில்தான் அப்படித் தெரிவித்தேன். இத்துணைச் சீக்கிரம் அந்த கருத்துக்கு வலு கிடைக்கும் என்று எண்ணால் எதிர்பார்க்க முடியவில்லை.

இன்றைய சமுதாயம், மனிதனை மனிதன் என்னும் இன்னொருவனாலேயே வஞ்சிக்கப்படக்கூடிய அளவுக்குச் சமூக அமைப்புக்கள் இருப்பதுதான் சமுதாயக் கேடுகளுக்குக் காரணம் என்று காமராசர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

காமராசரது கருத்தை நாம் அரசியல் கோணத்திலிருந்து விமர்சிக்க விரும்பினால் முற்றிலும் புதியதொரு உலகுக்குள்ளேயே நுழைந்துவிட முடியும். அப்புறம் மீண்டுவந்து சமூகச் சிந்தனைகளைப்பற்றி நினைத்துப் பார்க்கக்கூட நேரமற்றுப்போய் விடக்கூடும். ஆகவே, நமக்கு வலு தரக்கூடிய பேச்சு என்கிற முறையிலே மட்டும் எடுத்துக்கொண்டு பார்ப்போம்.

மனிதனை மனிதன் வஞ்சிக்கிறான் என்பதை இப்போதுதான் காமராசர் முதன் முதலாக எடுத்துக் காட்டி, அந்தப் பெருமைக்குரிய முதல் மனிதராக ஆகிவிடவில்லை.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளை
கள்ளத்தால் கள்வேம் எனல்

என்று திருவள்ளுவப் பெருந்தகை எடுத்துக்காட்டி இருக்கிறார் என்கிறபோது பேரறிவாளர் ஒருவரது கவனத்தைக்கவரும் அளவுக்கு நிலைமை வளர்ந்து விட்டிருக்க வேண்டுமில்லையா!

"பிறன் பொருளை" என்பதற்கு எத்தனை எத்தனையோ பொருள்களை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் இங்கே அது முக்கியத்துவத்துக்குரியதல்ல!

பிறன் பொருளைக்கள்வேம்' என்ற எண்ணம், மனிதனை மனிதன் வஞ்சிக்க எண்ணும் நிகழ்ச்சியின் அடையாளமே யாகுமில்லையா? ஆகவே நண்பா, இது காமராசருக்கு மட்டுமே உரிய பெருமையல்லவென்றாலும், இந்தச் சந்தர்ப்பத்திலே அவரது பேச்சு நமக்குக் கொஞ்சம் "கருப்" பொருளைத் தந்திருக்கிறது என்கிற அளவுக்கு மட்டுமே எடுத்துக்கொள்வோம்!



# உறவு உதட்டளவிலா?

"வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இதுவரை தமிழக அரசு 10 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. இதில் மத்திய அரசு வழங்கியிருக்கும் தொகை மூன்றேகால் கோடி ரூபாய்கள் தான். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலவரத்தைப் பார்க்கையில் மத்திய அரசு செய்துள்ள உதவி யானைப் பசிக்கு சோளப் பொறி போட்டதுபோல இருக்கிறது.

காலத்தால் செய்யாத உதவி—செய்யப்படாத உதவிக்கு சமமாகும். மத்திய மாநில உறவு வளரவேண்டும் என்று மத்திய அரசு கூறுவது வெறும் உதட்டளவில் நின்றுவிடுகிறது. மாநிலங்களுடன் உறவு வளரவேண்டும் என்று மத்திய அரசு உண்மையிலேயே விரும்பினால் தமிழகத்துக்கு அவர்கள் உதவி செய்ய விரைந்து முன்வர வேண்டும்.

—கலைஞர் மு. க. திருச்சி செய்தியாளர் கூட்டத்தில்.

## ஆலோசனை

> நல்ல ஆலோசனை மட்டும் சொல்பவன் ஒரு கையால் கட்டிடம் கட்டுகிறான்; நல்ல ஆலோசனையுடன் தன் நடத்தையையும் மாதிரியாகக் காட்டுபவன் இரு கைகளால் கட்டுகிறான்; நல்ல முறையில் கண்டித்து விட்டுத் தனது தவறான நடத்தையைக் காட்டுபவன் ஒரு கையால் கட்டியதை மறு கையால் உடைப்பவனாவான். —பேக்கன்.

மனிதனை மனிதன் வஞ்சிக்கிறான் — என்பது பொருளாதார கோட்பாடு. இதனை காமராசர் சமூக நீதி என்பதன்பாலேற்றி. அது தடுக்கப்பட வேண்டும்; இளைஞர்கள் இதற்குத் தயாராக வேண்டும் என்கிறார்.

அதாவது சமூக அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் மனிதன் மீது பொருளாதார கோட்பாடு திணித்துக் காட்டப்படுகிறது. காமராசர் இதனைக் கூறுவதால் அவர் அரசியல் கருதிக் கூறுகிறார்.

என் வாதமெல்லாம் நண்பா. சமூகம் என்பது வளர்ந்து வந்துவிட்டிருக்கும் இந்த பூதாகாரமான வடிவத்தில் "சமுதாயம்" என்ற அளவுக்கு மட்டும் தனித்தியங்க முடியாததாகும். சமுதாயம் என்பதனுடன் அரசியலும், பொருளாதாரமும் இணைந்து மூன்றின் கலவையாகவே இருக்கிறது என்பதுதான்.

எனவேதான் மனிதனது தன்மைகளையும், வஞ்சித்து வாழும் காரணங்களையும், வஞ்சித்தே வாழ வேண்டிய நிலைமையினையும், அதற்காக அமைந்துள்ள சமூக நியதிகளையும் மட்டும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு திருத்திவிட முடியும் — திருத்திவிட வேண்டும் என்று குரல் கொடுப்பது முடியாது — கூடாது!

மாமேதைபேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியபடி, முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னே மறைந்த வால்டேர், லெனின், சாக்ரடீஸ் ஆகியோர் நடாத்திய புரட்சிகளின் ஒரு கூட்டுச் சக்தியாகக் கழகம் இயங்கித் தீரவேண்டியிருக்கிறது.

இப்படிக் கூறுகிறபோது நண்பா, கழகம் இதுவரையில் இதற்காக எந்த விதிகளையும் வகுத்துச் செயல்படவில்லையா? இனிமேல்தான் செயல்பட்டுத் தீரவேண்டுமா? என்று கேட்கக்கூடாது. ஏனென்றால் இன்றைய மனிதன் அவ்வளவு "லேசான"வனாக இல்லை. எடுத்துக் காட்டக்கூடிய எந்தவொன்றையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு பெருந்தன்மை படைத்தவனாகவுமில்லை.

அதனாலேதான் இதுவரையில் மனித குலத்துக்காக பல்லாயிரக் கணக்கானவர்கள் அறிவுரைகள் வழங்கியும் நல்லுயிர் ஈந்தும் மன்னிய புகழுக்கு மட்டுமே சொந்தக்காரர்களாக மாறியிருக்கிறார்களே ஒழிய மண்டலத்தைத் திருத்தியவர்களாக யாருமில்லை. அந்த இடம் இன்று வரையில் காலியாகவே இருக்கிறது. எதிர்காலத்திலாவது நிரம்பும் என்ற அறிகுறிகூட தோன்றவில்லை.

சமூக அநீதிகள்—என்று எந்த இடத்தைக் காட்டமுடியும்? இது வரையிலே தொட்டுக்காட்டியவர்கள் எந்த இடத்தைத் தொட்டுக் காட்டியிருக்கிறார்கள்?

வாழ்க்கை நெறியினையா? வாழவேண்டிய முறையினையா? வாழ்கின்ற முறையிலே காணப்படும் ஒட்டை உடைசல்களையா?

காமராசர் தொட்டுக் காட்டும் "வஞ்சிக்கின்ற" பகுதி எந்த இடத்தைச் சுட்டிக் காட்டுகிறது?

கை, கால், தலை, உடல் என்று அனைத்துப் பகுதிகளுமே சேர்ந்த ஒரு உருவத்தைத்தான் "மனிதன்" என்று வருணிப்பார்கள் ஆஸ்தி வாதம் புரிவோர். உடல்கூறு இயல் தத்துவவாதிகளின் இந்த வாதம், உடலின் எந்தவொரு பகுதியைச் சுட்டிக்காட்டி வினா வெழுப்பினாலும் அவை அவற்றிற்கு ஒரு பெயரிட்டுச் சொல்ல முனைவார்களே தவிர, 'மனிதன்' என்பதற்கு அனைத்துப் பகுதிகளையும் இணைத்துதான் விடையிறுப்பார்கள்.

அதுபோலவேதான் மனிதனது சமூக நீதி அல்லது சமூக அநீதி என்பதில் எந்தவொரு தனிப் பகுதியையும் எடுத்து விமர்ச்சித்து இது நீதி நெறியுடையது— இது அநீதியின்பாற்பட்டது என்று பிரித்துக்காண முடியவில்லை.

இதற்கான முக்கிய காரணம் மனித நியதிகளோடு அரசியல் கோட்பாடுகளும் பொருளாதார இழைக் கோடுகளும் பின்னப்பட்டு பிரிக்க முடியாமலிருப்பதேயாகும்.

சுற்றிச் சுற்றி வந்தாலும் புறப்பட்ட இடத்திற்கே வந்துசேர வேண்டியிருக்கும் உலக அமைப்பினின்றும் ஒதுங்கிவிட முடியாதவாறு எங்கே சென்று எதுபற்றிப் பேசினாலும் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் கலந்த கலவை என்ற வளையத்துக்குள்ளேதான் வந்து விழவேண்டியிருக்கிறது.

காமராசர் கருத்துப்படி—மனிதனை மனிதன் வஞ்சிக்கின்ற தன்மைகளைக் கொண்ட சமூக அமைப்பு மாற்றியமைக்கப்பட இளைஞர்களால்மட்டுமே முடிந்தவொன்றா?

> "பொருளாதாரக் கட்டுப்பாடுகள், வரவு செலவுப் பற்றுக் குறையைச் சரிப்படுத்த நோட்டுக்களை அச்சடித்தல் இறக்குமதிக் கொள்கை, ஆகிய மூன்றும்தான் சமூக அநீதிகள் பெருகியதற்குக் காரணம்.
>
> பொதுமக்கள் பொருளாதாரக் கொள்கைகளை அலசி ஆராயக் கூடியவர்கள் அல்லர்; ஆனால் தவறான பொருளாதாரக் கொள்கைகளின் கேடுகளை அனுபவிக்க வேண்டியவர்களாக விருக்கிறார்கள்.
>
> மக்கள் படும் துயரங்களுக் கெல்லாம் உண்மையான காரணங்கள் முதலாளித்துவ சமூக அமைப்பும், நிலப் பிரபுக்களின் சுரண்டலும் வட்டிக் கடைக்காரர்களின் இலாப நோக்கமும்தான். ஆனால் இவற்றைப் பற்றி மக்களிடம் கூறப்படுவதில்லை. மாறாக, அந்தப் பகுதி மக்களின் தனி நலன்களையும் பிரச்சினைகளையும் கவனிப்பதற்குத் தனி மாநிலம் தேவையென்று நம்புமாறு செய்யப்படுகிறார்கள்.
>
> தொழிலிலும், வர்த்தகத்திலும் வெளி மாநிலத்தவர்கள் இருப்பதும், வேலை செய்வோர் வெளிமாநிலத்தவராக இருப்பதும் முன்னேற்றத்துக்குத் தடை என்று பிரசாரம் செய்யப்படுகிறது.

இத்தகைய உணர்ச்சிகள் வளருவதற்கு மத்திய அரசு கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கைகள்தான் காரணம். அந்தப் பொருளாதாரக் கொள்கைகளினால் உருவான சமூக அநீதிகள்தான் காரணம்!

சமூக அநீதி என்பதோடு மட்டும் பிரச்னை நின்று விடவில்லை; சட்டம்—ஒழுங்கு ஆகியவையும் சீர்கெடுகிறது. மக்களின் வாழ்வுக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இருப்பதில்லை. இதனால் உற்பத்தியும் வேலை வாய்ப்பும் பாதிக்கப்படுகின்றன.''

என்பதாக சென்ற திங்கள் பம்பாயிலிருந்து பொருளாதார வல்லுநர் ஒருவர் சமூக அநீதி என்பது பற்றிச் சித்திரித்திருக்கிறார். சமூக வாழ்க்கையை பொருளாதாரம் எந்த அளவுக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்பது அந்த வல்லுநரது இந்த கருத்துக்கள் ே ாதுமானதாகவே இருக்கக்கூடும். புதுடில்லி பொருளாதார ஆராய்ச்சிக் கழக இயக்குநர் பேராசிரியர் பி. ஆர். ஷெனாய் என்ற இந்த மேதையின் கருத்துக்கள் நமது கருத்துக்கும் முற்றிலும் தொடர்புடையதாகும்.

சமுதாயம் என்பது இன்று தனித்த ஒன்றாய் இருக்கவில்லை, இருக்க முடியவில்லை என்கிறார் திரு. ஷெனாய். சமூக அநீதிகள் பெருகியதற்குக் காரணங்கள் என்பதாகச் சில பற்றியும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

பொருளாதார ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவரது சமூகக் கண்ணோட்டமும், தமிழக அரசியல் தலைவரது சமூகக்கண்ணோட்டமும் சமூகத்தில் அநீதி மலிந்து கிடக்கிறது என்பதாகத்தான் இருக்கிறது.

சமூகத்தின் எந்த இடத்தை இந்த அநீதிகள் பற்றிக்கொண்டுள்ளன? சமூகம் என்பதே, மனிதனை மையமாய்க்கொண்டு எழுப்பப்பட்ட நிபந்தனைக் கோட்டை எனக்கண்டோம். எனவே, மனிதனது முழுவாழ்க்கை முறையையும் அநீதிகள் என்று வருணிக்கப்படும் தீயநடைமுறைகள் முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன.

இந்த ஆக்கிரமிப்பினை முறியடிக்க. காமராசர் கோருவதுபோல இளைஞர்களால் மட்டுமே முடியாது. மனிதகுலம் முழுவதுமாக முயன்று பார்க்கவேண்டும்! முடியுமா?

ஒரு நடைமுறையினை உண்டாக்கிப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறபோது அதிலே முடியுமா? என்பதற்கு இடமில்லை. ஊதுகிற சங்கை ஊதிவைப்போம் என்றும் செயல்பட முடியாது.

ஏதாவது செய்தாகவேண்டும். செய்வன சீர்திருத்த முடையதாக விருக்கவேண்டும். அத்தகு சமுதாயச் சிந்தனைகளை யார் எப்படி வடித்துத்தர முடியும்! இதுவரையில் வடித்தவைகள் என்ன ஆயிற்று? அடுத்த கிழமை ஆராய்வோம்.

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

With the best compliments from:

# Venkateswara Engineering Contractor

## POLLACHI.

## கேட்டீரா! சேதி!

நம் நாட்டார், கள்ள கரன்சிகளை தயாரிப்பதில் மட்டுமே கெட்டிக்காரர்கள் என்றிருந்த நிலைமை மாறத் தொடங்கி இருக்கிறது. இப்போது கள்ள "பரிசுச் சீட்டு"க்களையும் தயாரித்துப் புழக்கத்திலும் விட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. வெளி மாநிலங்கள் சிலவற்றில் இப்படி நடைபெறுவதாகச் செய்தி வந்திருந்தன முதலில்! இப்போது தமிழ் நாடும் இப்படியொரு செய்தியைச் சந்திக்கிறது. அரசுத் துறையினர் தீவிரமாக சிந்தனை செய்யவேண்டும். போலி முறை புகாதவாறு ஒரு திட்டம் தயாராக வேண்டும், விரைவாக இது நடைபெறவில்லை யென்றால், பரிசுச் சீட்டு திட்டம் மக்களது நம்பிக்கையை கொஞ்சங் கொஞ்சமாக இழந்து விடவே செய்யும்.

* * *

இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்பார்கள். கடந்த 1947 முதல் 1967 வரையில் தமிழ் நாட்டை உடும்புப் பிடியாய்ப் பிடித்து வைத்து வதைத்துக்கொண்டிருந்தவர்கள் காங்கிரசுக்காரர்கள். நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக காங்கிரசு ஆட்சிக்கும் கேரள ஆட்சிக்கும் பத்தாண்டுக் காலத்துக்கு மேலாக "பேச்சு வார்த்தை"கள் நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கின்றன —காரணம் இப்போது காங்கிரசுத் தலைவர் கூறுவதுபோல பொறுத்துக்கொண்டிருந்தால் பலன் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையாக இருக்கலாம். காங்கிரஸ் பொறுத்துக் கொண்டிருந்த அளவுக்கு மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கவில்லை. 'போ'யென்று கூறி விட்டார்கள். கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர் அந்தப் பிரச்னையை "அவசரமான தாக" உணர்ந்தது. பத்தாண்டுக் காலத்துக்கு முன் இருந்த மக்கள் தொகை இன்றில்லை. அது நதி நீரின் வேகத்தைவிட, மின்விசையின் வேகத்தைவிட, ஏன் ஒலியின் வேகத்தை விடவும்கூட அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தேவைகளும் அதிகரிக்கின்றன. பிரச்னையொன்றை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமானால் இரு தரப்புக்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைதான் தேவை. அந்த அடிப்படையில்தான் பாகிஸ்தானைக் கூட பிரித்துக் கொடுத்தார்கள். இன்னும் அதுகேட்டுக் கொண்டிருக்கும் நாடு நகரங்களைக்கூட கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். 100 கோடிக்கும் அதிகமான போராயுதங்களையும் பிற பொருள்களையும் பாகிஸ்தான் கடந்த போரின்போது பறித்துக் கொண்டிருந்தாலும், பிடித்த சில இடங்களைக்கூட விட்டுக் கொடுத்ததும், பிரச்னை தீரவேண்டும் என்ற அடிப்படையில்தான்! தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் நதிநீர்ப் பங்கீட்டு விவகாரத்தை முற்றுக்குக் கொண்டு வந்திருப்பதை எடுத்த எடுப்பில் வரவேற்றவர், இப்போது தடுமாறிக் கொண்டிருக்கிறார். நாடு முழுவதையும் பாதிக்கச் செய்து கொண்டிருந்தது காங்கிரஸ் ஆனால் கலைஞர் அதனைத் தடுத்து விட்டிருக்கிறார். எந்த நல்ல காரியத்தையும் ஏற்றுக் கொள்வது என்பது காங்கிரசுக்குப் பழக்கப்பட்டதல்ல. இதை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியும் என்று நம்பலாமா என்ன?

* * *

தெலுங்கானா விவகாரம், கோடை வெப்பத்தைக் காட்டிலும் அதிக அளவு சூடு பிடிக்கத் தொடங்கி இருக்கிறது. போலீசாரை எதிர்த்து —எதிர்த் தரப்பினர்கூட துப்பாக்கிகளைப் பயன்படுத்தத் தொடங்கும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டிருக்கிறது. இதிலேகம்யூனிஸ்டுகள் நேர்முகமாக ஈடுபடவில்லை. என்றாலும் பின்னணி இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கவும் இடமுண்டு. காங்கிரசுக்காரர்கள்கூட பட்டும் படாமலும் போராட்டத்தை ஆதரிக்கிறார்கள். மொத்தத்தில் பிரதமரின் எட்டு அம்சத் தெலுங்கானா திட்டம், வெற்றி பெறவில்லை என்றே தெரிகிறது. ஆந்திரப் பிரிவினை, நடைபெற்றுத் தீரவேண்டிய நிர்ப்பந்தம், எந்த நிலைமைகளால் நேரு பண்டிதருக்கு ஏற்பட்டதோ, அதே நிலைமைகள். அதிகமான அளவுகூட இப்போது ஏற்பட்டிருக்கிறது. பிரச்னையின் உள்ளே புகுந்து அலசி ஆராயவேண்டிய தருணம் வந்து விட்டது என்றே தெரிகிறது. வன்முறைகள் நாடெங்கும் தலையெடுக்கத் தொடங்கி இருக்கின்றன. வளரும் தலைமுறையினரில் நல்வாழ்வு பற்றி எண்ணிப் பார்ப்பார் எவருமில்லை! எண்ணிப் பார்த்துச் செயல்பட்டால்தான் பிரச்னைகளே இல்லையேயென்று சொல்கிறீர்களா?

* * *

கட்சி ஏடுகளின் தரம் பற்றிய கவலை காங்கிரஸ் தலைவருக்கு வந்திருக்கிறது என்றால் அது வியப்புக்குரியதுதான்! இது தொடர்பாக முதல்வர் கலைஞருக்குக் கடிதம்கூட எழுதியிருக்கிறாராம்! கழகஏடுகளின் தரம் மிகவும் கெட்டிருப்பதாக. சுப்பிரமணியனாருக்குக் கழக ஏடுகள் மட்டுமே காட்டப்படுகின்றனவா, என்று ஐயமேற்படுகிறது. காங்கிரஸ் ஏடுகளுக்குத் தரப்படும் சில பதில்கள் தரக் குறைவானவை என்று மட்டுமே கருதுகிறார்கள். எப்போதுமே விவகாரத்தை ஆரம்பித்து வைப்பவர்கள் காங்கிரசுக்காரர்கள்தான்! என்றாலும் காங்கிரஸ் தலைவருக்கு இவையெல்லாம் தெரியாமற் போய்விடுவது அதிசயமே! சில குறிப்பிட்ட காங்கிரஸ் ஆதரவு ஏடுகளை காசு கொடுத்து வாங்கிப் பார்த்துவிட்டு, அப்புறம் அதுபற்றிப் பேசவேண்டும் காங்கிரசுத் தலைவர்! அப்படிச் செய்தால்தான் காங்கிரஸ் இதழ்களின் நாற்றம் மூக்கைத் துளைப்பது அவருக்குத் தெரியவரும்! செய்வாரா? நாற்றத்தைப் போக்குவாரா?

* * *

நீண்டகாலம் உயிர் வாழ்வது எப்படி?—'ரோஜா மலரின் நறுமண நுகர்ச்சி மனித வாழ்நாளைக் கூட்ட உதவுகிறது' என, ஜெர்மன் பல்கலைக் கழகத் தாவர ஆராய்ச்சி வல்லுநர் டாக்டர் குர்ட் ஜெரமியாஸ் கூறியிருக்கிறார்.

எடுத்துக் காட்டாக, ஜெர்மன் கூட்டாட்சித் தலைவராக இருந்த கோல்ராட் அடினார் தமது 91-வது வயதில் (இரண்டாண்டுகளுக்கு முன்னர்) காலமானதை இவ்வாராய்ச்சியாளர் சுட்டிக் காட்டி—கோன்ராட் அடினார் ஒரு பெரும் ரோஜா பிரியராக இருந்ததையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"மணம் நிறைந்த ஒரு கொத்து ரோஜா மலர், மனித இரத்த ஓட்டத்தை செம்மைப்படுத்த வல்லது' டாக்டர் ஜெரமியாஸ் சொல்கிறார்.

# “மடியில் நெருப்பு”

—நா. ஜகந்நாதன், எம். ஏ.,—

எதிர்வீட்டு வாலிபன் சதா தன் வீட்டு ஜன்னலையே பார்த்துக்கொண்டிருப்பதாக அவருக்கு ஒரு சபலம் தட்டியது. ஏன் என்றால் அவர் மகள் மாலதி மிகவும் அழகி; திருமணமாகாத பெண்; அவளும் ஜன்னலருகே எப்போதும் நிற்கிறாள் என்று அவருக்கு ஒரு சந்தேகம். மாலதியின் தசப்பனார் மாகாலிங்கம் மட்டும் என்ன, எந்தத் தகப்பனுமே அப்படித்தான் நினைப்பான்! பையனும் ஒண்டிக்கட்டைபோல் தோன்றியது; கல்லூரி மாணவனைப்போல் காணப்பட்டான்! கையில் ஏதோ ஒரு புத்தகம் எப்போதும்! பார்வை புத்தகத்தின் மீது அல்ல, பாவை அவள் எப்போது காட்சிதருவாள் என்று ஏங்கும் கண்களுடன் ஜன்னல் மீதுதான் இருந்தது பார்வை! மகாலிங்கம் பலமுறை இந்தக்காட்சிகளைக் கண்டுவிட்டார்! அவர் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றி சந்தேகத்தை வளர்த்து, குழப்பத்தில் ஆழ்த்தின! மனிதர் என்ன செய்வார்; பாவம்! மகளுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று இப்போதுதான் அவர் மனத்தில் எண்ணம் தோன்றியது! இதுநாள்வரை தன் மகளை வயது வந்த ஒரு பெண்ணாக திருமணத்திற்கு நிற்கும் கன்னியாக அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை! அதற்கு அவருக்கு நேரமுமில்லை! மனிதன் தவறு செய்த பிறகுதானே திருந்தவேண்டும், இனி தவறுகள் செய்யக்கூடாது என்று சபதம் கொள்கிறான்? அதுபோலத்தான் மகாலிங்கம் மகள்மீது தனியாகக் கவனம் செலுத்துவதில் முனைந்தார். வரன் வேட்டையாடுவதில் ஈடுபட்டார்.

வரன் அவ்வளவு சீக்கிரமாகக் குதிரவில்லை. என்னசெய்வது என்று அவருக்குப் புரியவில்லை. எதிர் வீட்டு வாலிபன், அந்த வீட்டில் இருக்கும் போதெல்லாம், இங்கே பார்த்துக்கொண்டிருப்பதுதான் பிறவி எடுத்ததன் பயன் என்று பிசகாமல், தவறாமல், வைத்தகண் வாங்காமல். ஜன்னலையே பார்த்துக்கொண்டிருந்தான். மகாலிங்கத்திற்கோ மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை. திடுதிப் என்று நேரடியாகப் பையனையே கேட்டுவிடலாம், “ஏனையா உனக்கு வேறு வேலை இல்லையா? என் பெண்ணையே பார்த்துக்கொண்டிருக்கிறாயே? உனக்கே இது நியாயமாகப்படுகிறதா?” என்று கேட்டுவிடத் துணிந்தார். ஆனால் இந்தக் காலத்து வாலிபனிடம் போய் அம்மாதிரிக் கேட்டுவிட முடியுமா? அதுவும் கல்லூரி மாணவனிடம்? “நான் உம் பெண்ணை எங்கே ஐயா பார்த்தேன்? நான் வானத்தை அல்லவா பார்த்துக்கொண்டிருந்தேன்! நான் ஓர் ஓவியன் அல்லது நான் ஓர் எழுத்தாளன் அல்லது ஒரு கவிஞன்” என்று எதையோ கூறித் தப்பித்துக்கொள்ளலாம் அல்லவா? வேறு என்ன செய்யலாம் என்று மகாலிங்கம் யோசிக்கலானார்.

நீண்ட நெடுநேரம் யோசித்த பிறகு மகாலிங்கம் இந்தப் பையனை அந்த வீட்டிலிருந்து கிளப்பிவிட வேண்டும், எப்படியாவது, என்ற முடிவிற்கு வந்தார். அது தவிர வேறு வழி அவருக்குத் தோன்றவில்லை. அந்த முடிவிற்கு வந்த பிறகு எப்படி அந்த யோசனையைச் செயல்படுத்துவது என்று ஆலோசிக்கலானார், அவ்வளவு சீக்கிரமாக அவனை அந்த வீட்டை விட்டுக் கிளப்பிவிட முடியும் என்று தோன்றவில்லை. மாதாமாதம் பையன். ஒழுங்காக வீட்டு வாடகையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்று அவர் கேள்விப்பட்டார். அப்படி இருக்கும்போது எவன் இந்த மாணவனை வீட்டை விட்டுக் கிளப்பத் துணிவான்? ஆகவே அவர் மீண்டும் யோசனை செய்யலானார்.

அதன் பிறகு அவர் பல இரவுகள் தூங்காமல், விழித்து, யோசித்துப் பார்த்தார். உருப்படியாக ஒரு யோசனையும் தோன்றவில்லை, கடைசியாக ஒரு யோசனை தோன்றியது. அதைச் செயல்படுத்த நினைத்தார். காகிதமும், பேனாவும் எடுத்தார். அவர் கைகள் நடுங்கின. எதையோ கிறுக்கினார், மீண்டும் படித்துப் பார்த்தார், ஒரு கவரில் போட்டு ஒட்டினார்; தபால் பெட்டியில் போட்டுவிட்டு வீட்டிற்கு வந்தார். அவர் முகத்தில் “தவறு செய்துவிட்டோம்” என்ற களை படர்ந்தது. ஆனாலும் வேறு வழி தோன்றாததால். இவ்வாறு செய்ய நேர்ந்தது. என்ன செய்வது பெண்ணைப் பெற்றால் சும்மாதானா?

அவர் எதிர் வீட்டின் சொந்தக்காரருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டார். அதன் பலன்? அந்த மாணவன் உடனே வீட்டை விட்டுக் காலி பண்ணி இருக்கவேண்டும்! ஆனால் அவ்வாறு நடக்கவில்லையே! ஏன்? மகாலிங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை. ஒருசமயம் இக்காலச் சட்டப்படி அவர்—அதாவது எதிர்வீட்டின் சொந்தக்காரர்- அந்த மாணவனுக்கு ஒரு மாதகாலம் நோட்டீஸ் கொடுத்திருக்கலாம்; வீட்டைக் காலி செய்வதற்கு, என்று மகாலிங்கம் தம்மைத் தாமே நாள்தோறும் தேற்றிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் எதிர்வீட்டு மாணவன் தன் அறையைக் காலி செய்கிறானா, என்று பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அந்த மாதிரி எதுவும் நிகழவில்லை! தாம் எழுதிய கடிதம் நன்றாக வேலை செய்யவில்லை என்று அவர் நினைத்துக்கொண்டார்! இதைவிட மிக நன்றாக ஒரு கடிதம் எழுதவேண்டும், எழுதி அதை எதிர்வீட்டுக்காரருக்குத் தபால் மூலம் அனுப்பவேண்டும் என்று அவர் முடிவு செய்துகொண்டார்! கடிதம் எழுதக் காகிதமும் பேனாவும் எடுத்துக்கொண்டு தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார், எதிர்வீட்டுத் திண்ணையைப் பார்த்தபடி!

என்ன ஆச்சர்யம்! எதிர்வீட்டு வாலிபன் பெட்டி, படுக்கைகளுடன் வெளியே வந்து கொண்டிருந்தான்! அவன் வீட்டைவிட்டு வெளியேறுகிறான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை! மகாலிங்கம் மனத்திற்குள் தம்மைத் தாமே பாராட்டிக்கொண்டார்! தாம் எழுதி எதிர் வீட்டுக்காரருக்கு தபாலில் அனுப்பிவைத்த மொட்டைக் கடிதம் நன்றாக வேலை செய்தது! ஆனால் மெதுவாகவே வேலை செய்து, பயன் தந்தது! பையன் வெளியேறுகிறான்; டாக்ஸி புறப்படுகிறது; மகாலிங்கம் மனதிற்குள் பையனுக்கு ‘டாட்டா’ சொல்கிறார் பையன் டாக்ஸியில் கண்ணை விட்டு மறைகிறான். மகாலிங்கம் ‘அபபாடா!’ என்று மனத்திற்குள் கூறிக்கொள்கிறார்! அதே நேரத்தில்

அவர் மனம் தாம் எதிர்வீட்டுக்காரருக்கு எழுதிப் போட்ட அந்த மொட்டைக் கடிதத்தை நினைத்துக் கொண்டது. எதிர்வீட்டில் இருந்த அந்த வாலிபன்மீது ஆபாசமான, அபாண்டமான பழிகளைச் சுமத்தி இப்படிப்பட்ட மாணவனை வீட்டில் வைத்திருப்பது, உம் வீட்டில் உள்ள பெண்களுக்கு ஆபத்தை வரவழைத்து அவமானத்தை உண்டாக்கலாம்; ஆகவே அவனை வீட்டைவிட்டு உடனடியாகக் கிளப்பிவிடுவது நல்லது என்று பொருள்பட அவர் அக்கடிதத்தில் எழுதி இருந்தார்!

எதிர் வீட்டு வாலிபன் அந்த வீட்டைவிட்டுப் போனதிலிருந்து மகாலிங்கம் தம் மகள் மாலதியைக் கண்காணிப்பதை விட்டுவிட்டார்! உலகம் ஒழுங்காகப்போய்க்கொண்டிருக்கிறது என்று மீண்டும் நம்பிக் கொண்டிருந்தார்!

ஒருநாள் திடீரென்று. பிற்பகலில் அவர் வீட்டிற்குத் திரும்பவேண்டி நேரிட்டது. அவரது: அலுவலகத்தில் யாரோ ஒரு பழைய அதிகாரி மரணம் அடைந்ததை முன்னிட்டு அலுவலகம் பிற்பகலில் மூடப்பட்டதால் அவர் வீடு திரும்பினார். அவர் அறைக்கு அடுத்தது, மாலதியின் அறை. அன்றைக்கு அந்த அறை உட்பக்கம் தாழிடப்பட்டதுபோல் தோன்றியது அவருக்கு! தம் அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்; மாலதியின் அறையில் நடப்பதென்ன என்று உற்றுக் கவனித்தார், ஓர் ஆண் குரல், ஒரு பெண் குரல். சந்தேகமே இல்லை, பேச்சு கேட்கவில்லை! ஆனால் சிரிப்பும், கும்மாளமும் கேட்டன! மகாலிங்கத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது! தன் மகளா இவ்வாறு...? அதற்குமேல் அவரால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. நேரம் சென்றது! கதவு திறந்தது! ஒரு வாலிபன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்! அவனை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது, மகாலிங்கத்திற்கு! அவருக்கு இருந்த மனக் குழப்பத்தில் அவனை எங்கோ பார்த்தோம் என்று உடனே நினைவிற்கு வரவில்லை. சிறிதுநேரம் யோசனை செய்த பிறகுதான் அந்த வாலிபன் யாரென்று தெரிந்தது. அவன் அந்த வீட்டின் பின்புறத்தில் குடியிருக்கும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன்! அடடா! மகாலிங்கம் மனம் என்னென்னவோ எண்ணிக் குழம்பியது!

வீட்டில் இருந்த சிறு பையன்கள், பெண்களின் உதவியை நாடினார் மகாலிங்கம். இரகசிய விசாரணை நடைபெற்றது; பல பயங்கரமான உண்மைகள் வெளியாயின; திடுக்கிடும் தகவல்கள் அவரைத் திகைக்க வைத்தன. அந்த வாலிபன் அடிக்கடி மாலதியின் அறைக்கு வருகிறான்; இருவரும் கதவை மூடிக் கொண்டு நீண்டநேரம் பேசுகின்றனர்; பெரும்பாலும் பிற்பகலில் தான் அவ்வாலிபன் வருகிறான்! அவர்கள் இருவரும் காதலிக்கின்றனர் என்று அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. மீதியை எல்லாம் அப்படியே, அப்பட்டமாய் அந்தப் பிஞ்சு நெஞ்சங்கள் கூறிவிட்டன. மகாலிங்கம் மனம் தத்தளித்தது. பாவம்! அந்த எதிர் வீட்டு வாலிபன்! அவன் இவர்களின் காதல் விளையாட்டுகளைத்தான் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான் போலும்! அநாவசியமாக, அவனை அந்த வீட்டை விட்டுத் துரத்திவிட்டோமே என்று அவர் மனம் வருந்தியது! பாவம்! அவன் எங்கு தத்தளிக்கிறானோ! வீடில்லாமல் எங்கு அவதிப்படுகிறானோ!

### ஆலோசனை

நண்பர்களுக்கு அவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆலோசனைகளைச் சொல்ல வேண்டாம்; அவர்களுக்கு மிகுந்த நன்மை பயக்கக் கூடிய ஆலோசனைகளையே கூறுக.

—டக்கர்மன்

மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு, எதிர்வீட்டு நெநப்பை அணைக்கப் போனதுபோல் மகாலிங்கம் தன் வீட்டிலேயே தன் மகளுக்கு ஒரு காதலன் இருக்கிறான் என்று தெரியாமல், எதிர்வீட்டு ஜன்னல் வழியாக இவர்களின் காதல் விளையாட்டுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வாலிபன் மீது தவறான, வீணான கற்பனைகளை நினைத்துக்கொண்டு, மொட்டைக்கடிதம் எழுதிப்போட்டார்! அவனைவீட்டை விட்டுத் துரத்திவிட ஏற்பாடு செய்தார்!

ஆனால் மகாலிங்கத்திற்குத் தெரியாது. அந்தக் கடிதம் எதிர்விட்டுக்காரருக்குப் போய்ச் சேரவேயில்லை அவர் கைகள் நடுங்கிய காரணத்தால், கடிதத்தில் விலாசம் எழுதும்போது தவறாக எழுதிவிட்டார்! முகவரி சரியாக இல்லாத கடிதங்கள் போய்ச்சேரும் அலுவலகத்துக்குப் போய்ச் சேர்ந்தது அக்கடிதம்!

அதுமட்டுமல்ல! மகாலிங்கத்திற்குத் தெரியாத தகவல் இன்னொன்றும் உண்டு! அந்தக் கடிதம் போய்ச் சேரவில்லை, பின் அந்த வாலிபன் ஏன் வீட்டைவிட்டுக் காலிசெய்து கொண்டு போனான்? அந்த வாலிபனுக்குக் கல்லூரியில் பரிட்சைகள் முடிந்துவிட்டன! அதனால் அவன் தன் சொந்த கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றான்! மகாலிங்கம் மீண்டும் தம் பெண்ணுக்கு வரன் வேட்டையாடுவதீல் தீவிரமாக முனைந்தார்! ●

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

யென்பது 'கண்துடைப்பு'க் கோரிக்கை என்று கூறிவிடமுடியும்.

எந்தவொரு விஷயத்தையும் சட்டு—புட்டு என்று தீர்த்துவிடக்கூடிய பெருந்தன்மை நமது மதிப்புக்குரிய மத்திய அரசுக்கு எப்போதுமே கிடையாது. பிரச்னை உருவாகி, பூதாகாரமான வடிவம் எடுத்து, விபரீதங்களை விளைவிக்கத் தொடங்கும்போதுதான் கண் விழித்துப் பார்ப்பதென்பது வாடிக்கையாகி விட்டிருக்கிறது.

பிரச்னைகளை. சூடாறப்போடுவது என்பது ஒருவகை அரசியல் வித்தகமாகும். இந்த வித்தகம் இடம், காலம் அறிந்துச் செயல்படுத்தப்படவேண்டும்.

மத்திய அரசு அப்படிச் செயல் படுகிறதா? என்பது சந்தேகத்துக்குரியதுதான்.

தெலுங்கானா—பிரிக்கப்படும் என்றால் அதனைத் துரிதமாகச் செயல் படுத்திவிடவேண்டும்.

பிரிக்கப்படமாட்டாது என்றால், அதனையும் விரைவாக அறிவித்து, அதன் விளைவுகளைச் சந்திக்கவும், சமாளிக்கவுமான எல்லாவித நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும். காலத்தைக் கடத்துவது—சட்டம் ஒழுங்கை மட்டுமே சீர்குலைக்கக் கூடியனவாக இல்லை—மற்றப் பகுதியினரையும் தீய உணர்வுக்குத் தூண்டிவிடக்கூடிய பேராபத்தையும் அடக்கிக்கொண்டிருப்பதாகும்.

★

# வினா-விடை

1. நிரந்தரத் தபால்தலைகளின் வரிசையில் அறிஞர் அண்ணா தபால்தலை இடம் பெறுமா?

முதலில் திருவள்ளுவர் தலை இடம் பெறட்டும். அதற்கான குரலை உயர்த்துங்கள்.

2. "அழகிப் போட்டி"கள் எவ்வாறு நடைபெறுகின்றன?

"அழகு"களைக் காட்டச் சொல்லி "டேப்" வைத்து அளவெடுக்கிறார்களாம். இதிலே நீதிபதியாக இடம் பெறுவர்களுக்குத்தான் யோகம் என்கிறார்கள். நீதிபதிகளின் விருப்பு வெறுப்புக்களைப் பின்னணியாய்க் கொண்டு 'தீர்ப்பு' வழங்கப்படுவக் கூட உண்டாம்!

3. கவிதை எழுதுவது கடினமான வேலையா?

"காஞ்சி"க்கு வரும் கவிதைகளை வைத்துச் சொல்கிறேன்—அது அத்துணைக் கடினமானத் தோன்றவில்லை.

4. இலக்கணம் பிழையாமல் கவிதை எழுதப்படுகிறதா—இப்போது?

கவிதை எழுதுவோரில் பெரும்பாலோர் 'ஒழிபியல்' பகுதியை முற்றக் கற்றிருக்கிறார்கள் — இப்போது!

5. 'காஞ்சி' இனியாவது 'அண்ணா மலர்' வெளியிடக் கூடாதா?

உங்கள் ஆசை நிறைவேறும் அளவுக்கு இந்த ஆண்டு 'காஞ்சி' அந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

6. ஷேக்அப்துல்லா வெற்றி பெறுவாரா?

அவர் இப்போது எந்த மாநிலத்தில் எந்த தொகுதியில், யாரை எதிர்த்துப் போட்டியிடுகிறார் என்பதைத் தெரிவிக்க வில்லையே நீங்கள்.

7. வினாக்கள் அனைத்தையும் தேர்ந்தெடுத்துதான் பதில் தருகிறீர்களா?

இந்தக் கேள்விக்குக்கூட பதில் தந்திருக்கிறேனே, புரியவில்லையா?

8. மல்லிகைக்கு மயக்கம் உண்டு என்பது உண்மையா?

மயங்கும் பருவத்தில் நீர் இருக்கிறீரா என்பதைப் பொறுத்து தேவையான பதிலைப் பொருத்திக் கொள்ளலாம்.

9. அரசியல் வினாக்களுக்கு மட்டும்தான் பதில் தருவீர்களா?

"அந்தரங்க" வினாக்கள் 'காஞ்சி'க்கு எழுப்ப யாரும் விரும்புவதில்லை—நினைப்பதில்லை.

10. 'சமுதாயச் சிந்தனை'களைப் பற்றி 'காஞ்சி' எழுதி இருக்கிறதே—வெற்றி கிட்டுமா?

களத்தில் இறங்கும்போது 'வெற்றி — தோல்வி'யைப் பற்றி நினைத்து ஆகுமா? சமுதாயம் மாறவேண்டும்—மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்! பசிக்கும்போது சோறு தின்றுதானே ஆகவேண்டும்!

11. மாநில அரசை, காய்தல்—உவத்தலின்றி விமர்சிக்கிறீர்களா நீங்கள்?

'காஞ்சி' ஒரு தி. மு. க. ஏடு என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். பேரறிஞர் அண்ணா அவர்களது சுவடு பின்பற்றி நடக்கவேண்டிய கடமை 'காஞ்சி'க்கு உண்டு என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

12. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களது 'நூறு நாட்கள்' பற்றி உங்கள் கருத்தென்ன?

பிரதமர் இந்திரா அம்மையாரது 'ஆயிரம் நாட்கள்' பற்றிய அவசியமென்ன என்பதை முதலில் தெரிவியுங்கள்.

13. அரசியலில் தரம் பேணப்பட வேண்டும் என்பது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

உங்கள் வினாவிலிருந்து நீங்கள் இந்தக் கருத்துக்கு மாறுபட்டவர்கள் என்றே தெரிகிறது.

கண்ணதாசனோடு தொடர்பு கொண்டிருக்கக்கூடும். ஏதாவது எழுதினால் 'கடிதம்' கடித்து விடுமே! தெரியாமலா காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் இந்த விஷயத்தில் துடிப்பாயிருக்கிறார்?

14. 'இளமையும் — காமமும் ஓராங்குப் பெற்றோர்' என்ற பாடல் மூலம் என்ன தெரிகிறது?

இளமையும், காமமும் எல்லாரிடத்திலும் இணைந்திருப்பதில்லையென்று தெரிகறது. இளமை இருக்கின்ற பலரிடத்தில் 'காமம்' இருப்பதில்லையோ என்னவோ! காமம் இருக்கின்ற பல பேரிடத்து இளமையும் இல்லாதிருக்கலாம்! பாடியவர் இதிலே பெரிய 'புலி' யென்று மட்டும் தெரிகிறது.

15. நேபாளத்துக்கு இந்தியா எந்த வகையில் கடமைப்பட்டிருக்கிறது?

நேபாளத்துக்கான முதலீட்டுச் செலவுகளை மட்டும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு இந்தியா கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் வருவாய் இனங்களை அபகரித்துக் கொள்ளும் போக்கு சீனாவுக்கிருப்பதாகத் தெரிகிறதே, என்ன செய்வது?

16. அரசியல் நிர்ப்பந்தங்களுக்காக அரசு ஊழியர்கள் ஸ்டிரைக் செய்வது சரியா?

எந்தவொன்றுக்குமே 'வேலை நிறுத்தம்' என்பது விரும்பத்தக்கதல்ல என்ற கொள்கையுடையவன் நான்.

17. 'சமுதாயச் சிந்தனைகள்' மூலம் என்ன சாதித்துவிட முடியும் என்று நினைக்கிறீர்கள்?

முதல் கட்டுரை மூலமே இப்படியொரு வினாவை நீங்கள் எழுப்பும் ஒரு நிலைமையுண்டாகியிருக்கிறதே—போதாதா?

18. தமிழக அரசுப் போக்குவரத்து தனியாரிடத்துவிடப்பட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும்.

டிரைவர், கண்டக்டர்களுக்கு கொஞ்சமாவது மரியாதையைக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை யேற்பட்டிருக்கும்.

19. 'காதல்' என்பதனை மலருக்கு ஒப்பிடலாமா?

ஏன், இரண்டும் மலர்ந்து கூம்பும் பண்புடையது என்பதனாலா?

# வாழ்க நீ!



—த. பி. சுந்தர்—

புன்சிரிப்புப் பூமகனே! பொன்னெழில் திருமகனே!
கண்ணிறைந்த சுருவிழியே! காவியத்தின் திருவடிவே!
எண்ணக் கோவிலிலே எளிமையின் திருஉருவே
கடமையின் தலைமகனே! கண்ணியத்தின் வழிமகனே!

புன்சிரிப்பை எமனுக்கோ பரிசாகத் தந்தனையோ?
உன்சிரிப்பைக் காண்பதற்கோ ஏங்கவைத்து சென்றனையோ?
ஏடிருக்கும் எழுத்திருக்கும் ஏற்றமிகு நடைகாணேன்
கதையிருக்கும் முடிவிருக்கும் அண்ணாஉன் நிழல்காணேன்.

உடலிருக்கும் உயிரிருக்கும் உணர்வினை நானறியேன்
வழியிருக்கும் ஒளியிருக்கும் காட்சிதனில் உனைக்காணேன்
பூமலர் போன்றாய் நீ! புதுவுலகத் தலைவன் நீ
வானுலவும் நிலவும் நீ வறுமை நீக்கும் தந்தைநீ

காட்டை நீ சீராக்கி சழனிக்கு உயிர் கொடுத்தாய்
வீட்டிலே தமிழ்மணக்க விளக்கினை ஏற்றிவைத்தாய்
தேம்பிடும் குழந்தைக்கு தேற்றவோ நீஇருந்தாய்
தவித்திடும் தம்பிகளுக்கு தனிபெரும் அண்ணாவானாய்

சொல்லுக்கு பொருள்தந்து சுகத்தைநீ மறந்திருந்தாய்
கல்லுக்கு வடிவம் தந்து கடற்கரைக்கோ காவலானாய்?
கண்ணீரெல்லாம் ஆறுகி கடலிலே சங்கமாகி
எழுப்புகின்ற வேதனையை என்னிறைவா செவிகேளேன்

உன்னுயிர் மறைவதற்கு இதுதானா நேரமண்ணா
மண்ணுலகில் நீயில்லா மனிதகுலத்தில் நானெதற்கு
திக்கெட்டும் திசையெல்லாம் வெற்றிமுரசு கொட்டினையே
ஊர்கெட்டு போவதற்கோ ஊர்பயணம் செய்தனையோ?

சீர்கெட்டுப்போன நாட்டை சீர்படுத்தி பெயரிட்டு
சிரம்தாழ்த்தி வணங்கவைத்த செம்மலே எங்குள்ளாய்?
முடிசூடா மன்னவனே! முத்தமிழ் காவலனே!
இடைக்கால வாழ்க்கையிலே ஏன்வைத்தாய் பெருஞ்சுமையை?

நின்றதுபோல் நின்றுநீ நெடுந்தூரம் சென்றுவிட்டாய்
கன்றிழந்த தாயைபோல் பரிதவிக்க வைத்துவிட்டாய்
தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றப்பிறந்த பெருமகனே
விழிமூடும் நொடிப்பொழுதில் மறந்துநீ உறங்கிவிட்டாய்

நடந்துவந்த பாதையெல்லாம் வீரநடை வெற்றிநடை
பேசுகின்ற பேச்செல்லாம் பொங்கிவந்த தமிழ்நடை
இத்தனையும் ஒருநொடியில் அடக்கிவிட்டாய் உன்நெஞ்சில்
எத்தனையுகம் பிறந்திடினும் அண்ணாஇல்லா உலகெதற்கு?

கல்வடித்த கண்ணீரும் கடல்விட்டப் பெருமூச்சும்
நீயிருந்து பார்த்திருந்தால் உண்மையினைப் புரிந்திருப்பாய்
போகுமுன் ஒருவார்த்தைப் போகிறேன் என்றுயா?
புன்னகை முகம்தழுவ மண்ணிலே மறைந்தாயே!

நான்செய்த பாவத்திற்குப் பழிபாவம் உன்மீதா?
ஊர்செய்த பாவத்திற்கு உன்னுயிர் போகலாமா?
பாரிமகன் வந்ததுபோல் வந்தென்னை அணைத்திட்டாய்!
காரியினை காண்பதற்கோ கண்மூடி சென்றுவிட்டாய்

அடைப்பட்ட வெள்ளமிங்கே விடுபட்டு வந்ததுபோல்
உயிர்விட்டுப் போனஅன்று நிலைகெட்டுப் போனோமே
கலையுலக மேதைநீ கவியுலகில் போதைநீ
அரசியலில் ஆசான்நீ அமைதியின் பெட்டகம்நீ

கண்ணகிக்கும் கம்பனுக்கும் கவிநல்லறிஞருக்கும்
கன்னித்தாய் விழாவெடுத்து கடற்கரையில் சிலைவைத்தாய்
உலகெல்லாம் மெய்மறக்க உனக்கோர் சிலையங்கே
எழுப்பிவைத்த ஏழைநெஞ்சில் ஏன்கொடுத்தாய் வேதனையை?

ஈராண்டு கழியவில்லை எடுத்தவேலை முடியவில்லை
பார்புகழும் வேளையிலே பரலோகம் போகலாமா?
மண்ணுலகம் விட்டுநீ விண்ணுலகம் போனாலும்
பண்ணுலகம் உள்ளவரை பரம்பொருளே வாழ்கநீ